# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

<u>புதுப்பிக்கத்தக்க சக்தி சார் கூட்டுப் பணிக்குழுவின் இரண்டாவது கூட்டம்</u>

புதுப்பிக்கத்தக்க சக்தி துறை சார்ந்த இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் இரண்டாவது கூட்டம் 2025 செப்டெம்பர் 23 ஆம் திகதி மெய்நிகர் மார்க்கம் ஊடாக நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட இந்திய பேராளர்களுக்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி துறை அமைச்சகத்தின் செயலாளர் ஸ்ரீ சந்தோஷ் குமார் சாரங்கி அவர்கள் தலைமவகித்த அதேசமயம், இலங்கை பேராளர்களுக்கு வலுச்சக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் K.T.M உதயங்க அவர்கள் தலைமை வகித்திருந்தார்.

2. சூரியக் கலம், காற்றாலை, மற்றும் பசுமை ஐதரசன் போன்ற வளரும் தொழில்நுட்பங்கள் உட்பட புதுப்பிக்கத்தக்க சக்தி துறை சார்ந்த அபிவிருத்திகள் தொடர்பாக இரு தரப்பினரும் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டிருந்தனர். அத்துடன் “ஒரே சூரியன், ஓர் உலகு, ஒரே வலையமைப்பு” என்பதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

3. சாத்தியமானதும் நிலைபேறானதுமான சக்தி மூலங்கள் மீதான கவனத்துடன் சக்தித்துறை சார்ந்த இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான தமது அர்ப்பணிப்பை இருதரப்பும் மீள உறுதிப்படுத்திக்கொண்டனர். கொள்கை மட்ட பேச்சுகள், திட்ட அபிவிருத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி துறைசார்ந்த அறிவுப் பகிர்வு ஆகியவற்றை ஒருங்கமைப்பதற்கான தளமாக இக்கூட்டுப் பணிக்குழு தொடர்ந்து பணியாற்றும்.

************

**கொழும்பு**
**25 செப்டெம்பர் 2025**